02.02.2026

இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை கலை அருவி இலக்கியப் பேரவை மற்றும் நச்சாந்துப்பட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து போதைப்பொருள் ஒழிப்போம், தற்கொலைகளைத் தவிர்ப்போம் என்னும் தலைப்பில் இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி 30.01.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை இந்தியன் செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் Dr.ச.ராசாமுகமது, குழுத்தலைவர் Dr. S.ராமதாஸ், துணைத்தலைவர் G.S.தனபதி, துணைகுழுத்தலைவர் AL.சொக்கலிங்கம், S.மதியாஷ், இணைச்செயலாளர் S.விஸ்வநாதன், பள்ளிச்செயலர் K.ராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதல் அமர்வில் சமூக சேவகர், சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டு உறுப்பினர் R.ஐஸ்வர்யா அவர்கள் “தற்கொலை தடுப்பு முயற்சி” என்னும் தலைப்பில் பேசினார். அவர் தம் உரையில் தற்கொலை என்பது ஒரு தனிநபர் பிரச்சனையாக மட்டும் பார்க்காமல் ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகக் கருதவேண்டும். இது மாணவர்களுக்குத் தேர்வின்போது ஏற்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. மாணவர்கள் நல்ல மதிப்பெண் எடுக்காததாலும் அல்லது தேர்வில் தோல்வியுற்றதன் விளைவாலும் விரக்தியில் தற்கொலை செய்துகொள்ள நினைக்கின்றனர். தற்கொலை என்பது தன்னம்பிக்கையற்ற நிலையை உருவாக்குகிறது. எனவே அது நிரந்தரத் தீர்வும் அல்ல என்பதை உணர வேண்டும். அந்த சிந்தனைகளிலிருந்து தங்களை மாற்றிக்கொண்டு மன அழுத்தத்திலிருந்து விடுபட வேண்டும், வாழ்க்கை மகிழ்ச்சியானது என்பதை உணரவேண்டும் என மாணவர்களிடம் எடுத்துரைத்தார்.

இரண்டாவது அமர்வில் JC.HGE R.மணி அவர்கள் “போதைப்பொருள் தவிர்ப்போம்” என்னும் தலைப்பில் பேசினார். அவர் தம் உரையில், போதைப்பொருள் பயன்படுத்துவது மனித குலத்திற்குத் தீங்கை விளைவிக்கும் இது பொதுவாக நட்பு வட்டாரத்திலிருந்து தொடங்குகிறது இதனைப் பயன்படுத்தினால் உடல் நலம்-கெடுதல், வாழ்க்கைமுறையில் மாற்றம் மற்றும் சமூகக்கேடு போன்றவை ஏற்படக்கூடும். ஆகவே இதனை மாணவர்கள் விழிப்புணர்வுடன் இருந்து வருங்காலச் சமூகத்தைப் போதை இல்லாச் சமூகமாக மாற்றவேண்டும் என்று மாணவர்களுக்குக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

முன்னதாகப் பள்ளியின் முதுநிலை ஆசிரியர் முனைவர் மா.ஆறுமுகம் வரவேற்றார். பள்ளியின் தலைமையாசிரியர் N.கணேசன் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்தார். ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறைத் தலைவரும் YRC மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான முனைவர் கு.தயாநிதி நன்றி கூறினார். இந்நிகழ்வைத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் P.லெட்சுமி ஒருங்கிணைப்புச் செய்தார்.